# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 11 நவம்பர் 2019 ₹1.00

## சேலம் மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டுச்சாலைப் பகுதியில் அமையவுள்ள "கால்நடை மருத்துவ அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயராய்வு நிலைய" வளாகத்தில் ரூபாய் 82.13 கோடியில் மாநிலத்தின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படும் என்று 01.11.2019 நாளிட்ட கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் (காப–6) அரசாணை எம்எஸ் எண் 155மூலம் அறிவித்தார்கள்.

### மண்டலப் பயிலரங்கில் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம் பங்கேற்பு



ஐதராபாத், பேராசிரியர் ஜெயசங்கர் தெலுங்கானா மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் 21.10.2019 மற்றும் 22.10.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்ட "தென்னிந்தியாவில் வணிகம் சார்ந்த வேளாண்மையின் வழிகாட்டிகள் இளைஞர்கள்" எனும் மண்டலப் பயிலரங்கில் நமது பல்கலைக்கழகம் சார்பில் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம் பங்கேற்று, பல்கலைக்கழக அரங்கு அமைத்துத் தனது உற்பத்திப் பொருட்கள், தான் அளிக்கும் சேவைகள் மற்றும் சாதனைகளைக் காட்சிப்படுத்தியது. மாண்புமிகு தெலுங்கானா மாநில ஆளுநர் டாக்டர் (திருமதி) தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் 21.10.2019 அன்று மண்டலப் பயிலரங்கைத் துவக்கிவைத்து, பல்கலைக்கழக அரங்கைப்பார்வையிட்டுப்புதிய கால்நடைஉற்பத்திப்பொருட்கள் உருவாக்கம் மற்றும் சேவைகளில் நமது பல்கலைக்கழகத்தின் பணிகளைப் பாராட்டினார். மேலும், பயிலரங்கில் நடைபெற்ற குழு விவாதத்தில் நமது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பங்கேற்று இளைஞர்களை வழிநடத்துதல், கொள்கை உருவாக்கம் மற்றும் தொழில்முனைவோர்க்கு நிதியுதவி குறித்த தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

### செல்லப்பிராணியின் இருப்பிடத்திற்கே சென்று நோய் கண்டறியும் சேவை



பல்கலைக்கழகத்தின் கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பும் கால்நடை மருத்துவ ஆய்வின்பயன்பாடுசார்பரிமாற்றத்தளமும் பெங்களூரு, இல்லுமி ஜீன் இந்தியா எல்எல்பி நிறுவனமும் ஒன்றிணைந்து செல்லப்பிராணியின் இருப்பிடத்திற்கே சென்று நாய்களில் இரத்த புரோட்டோசோன் ஒட்டுண்ணிகளைக் கண்டறிவதற்கான நோய் கண்டறிதல் சேவையை அளிக்கவுள்ளன. மேலும், தனியார் கால்நடை மருத்துவர்களிடம் இருந்து இரத்த மாதிரிகள் பெறப்பட்டு, பாலிமரேஸ் தொடர் வினைமூலமான பரிசோதனை முடிவுகள் 24 மணி நேரத்திற்குள் வழங்கப்பெறும். இந்தப் பரிசோதனை செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் ஆய்வக வசதியைக் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம் அளிக்கும். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் நோய் கண்டறிதல் சேவை மாதிரியை இல்லுமி ஜீன் இந்தியா எல்எல்பி நிறுவனத்தின் திரு. எம். வெங்கடேசன் அவர்களிடம் 18.10.2019அன்று வழங்கினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ், ஆராய்ச்சி இயக்குநர் (பொ.) முனைவர் சிசிலியா ஜோசப் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி



புதுதில்லி, அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் நிதியுதவியுடன் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் 14.10.2019 முதல் 25.10.2019 வரை செயல்பாட்டு உணவுப் பொருட்களின் வடிவமைப்பு மற்றும் மேம்பாடு குறித்த தொழில்நுட்பப் பகிர்வு'' எனும் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 14.10.2019அன்று துவக்கிவைத்தார். தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களைச் சார்ந்த உணவுத் துறையின் ஏழு தொழில்நுட்ப வல்லுநர்கள் உட்பட, மொத்தம் 40 பேர் பயிற்சியில் பங்கேற்றனர். விரிவாக்கக் கல்வி இயக்குநர்(பொ.) முனைவர் த. ராமசாமி அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பயிற்சி நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ப. தனலட்சுமி அவர்கள் நன்றி கூறினார்.

## மாடுகளில் நுண்ணொலி அலை வரைபடப் பயன்பாடு பற்றிய காணொலிக் கலந்துரையாடல்




பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்ககம் மூலம் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளைச் சார்ந்த நான்காம் ஆண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்ட மாணவர்களுக்காக ''மாடுகளில் நுண்ணொலி அலை வரைபடப் பயன்பாடு'' பற்றிய காணொலிக் கலந்துரையாடல் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 12.10.2019அன்று நடத்தப்பட்டது. கலந்துரையாடல் நிகழ்ச்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் துவக்கிவைத்தார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். இசக்கியல் நெப்போலியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். செல்வராஜு அவர்கள் நன்றி கூறினார். இந்நிகழ்வில் மொத்தம் 292 மாணவர்கள் பங்கேற்றனர்.

## கண்டுணர் பயணம்

ஆத்மா திட்ட நிதியுதவியுடன் கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது கரூர் வட்டாரத்தின் 50 விவசாயிகள் ''பால் மற்றும் பால் பொருட்கள்'' குறித்து அறிந்துகொள்ளும் வகையில் 29.10.2019அன்று நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்துள்ள பால் பதனிடும் நிலையத்திற்குக் கண்டுணர் பயணம் மேற்கொண்டது.

## இடுபொருட்கள் வழங்கல்



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உணவியல் துறையானது திருநெல்வேலி மாவட்ட மானூர் வட்டத்தின் 500 பயனாளிகள் பயனடையும் வகையில் வேளாண்மைத் துறையின் ''ஒருங்கிணைந்த பண்ணையம்'' எனும் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் / ராஷ்ட்ரிய க்ருஷி விகாஸ் திட்டம்–2018–19ஐ செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் இறுதித் தொகுதிப் பயனாளிகள் 60 பேருக்குப் பசுந்தீவனக் கரணைகள், அடர் தீவனம், தானுவாஸ் ஸ்மார்ட் தாதுப்புக் கலவை, கன்று வளர்ப்புக் கருவிகலப் பெட்டி ஆகியவை கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்களால் 31.10.2019அன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மானூர் வட்ட வேளாண் உதவி இயக்குநர் திருமதி சுபாசெல்வி, கல்லூரியின் கால்நடை உணவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ம. செல்லப்பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## புதிய கட்டடங்கள் திறப்பு விழா



கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன்

புதிதாகக் கட்டப்பட்ட தேர்வுக்கூடத்தைப் புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வேளாண் கல்விப் பிரிவின் உதவித் தலைமை இயக்குநர் (கல்வித் திட்டமிடல் மற்றும் மனையியல்) முனைவர் பி.எஸ். பாண்டே மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் ஆகியோர் 04.10.2019 அன்று திறந்துவைத்தனர். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இணைப்பு அலுவலர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் ஆகியோர் பங்கேற்று, வாழ்த்துரை வழங்கினர். விரிவாக்கக் கல்வி இயக்குநர் (பொ.) முனைவர் த. ராமசாமி அவர்கள் நன்றி கூறினார். இந் நிகழ்ச்சியின்போது நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி




மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் புதிதாக கட்டப்பட்ட மகளிர் (யமுனா) விடுதியை, புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வேளாண் கல்விப்பிரிவின் உதவித்தலைமைஇயக்குநர் முனைவர் பி.எஸ். பாண்டே அவர்கள் 04.10.2019 அன்று காணொலிக் காட்சிமூலம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

### உலக முட்டை தினம்

★ கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும், கரூர், வேளாண் அறிவியல் நிலையமும் இணைந்து 16.10.2019 அன்று கரூர் மாவட்டம், புழுதேரியில் உலக முட்டை தினத்தைக் கொண்டாடின. இதில் 70 விவசாயிகள் கலந்து கொண்டனர். நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. எம். பரமேஸ்குமார் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். கரூர்,




வேளாண் அறிவியல் மைய முதுநிலை அறிவியலாளர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜெ. திரவியம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

★ புனே, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு நிதியுதவியில் செயல்பட்டு வரும் "முட்டை மற்றும் கறிக்கோழி இறைச்சி உண்பதால் ஏற்படும் நன்மைகள்" எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக, நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் உலக முட்டை தினம், இராசிபுரம் அரசினர் மருத்துவமனையில் 11.10.2019 அன்று கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் வெங்கடேஸ்வர ஹேச்சரீஸ் உதவி மேலாளர் மருத்துவர் சொ. மேகநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, அரசினர் மருத்துவமனையின் உள் நோயாளிகளுக்கு முட்டை வழங்கினார். இராசிபுரம் அரசினர் மருத்துவமனையின் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஆர். செந்தில்குமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

### வனவிலங்கு வார விழா–2019

★ வனவிலங்கு வார விழா–2019ஐ முன்னிட்டுச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வனவிலங்கின அறிவியல் துறைமூலம் 02.10.2019 அன்று "இந்தியப் பாம்புகள் மற்றும் பாம்புக்கடி மேலாண்மை" எனும் தலைப்பில் சென்னைப் பாம்புப் பண்ணையின் துணை இயக்குநர் டாக்டர் ஆர். கணேஷ் அவர்களின் சிறப்பு விரிவுரைக்கும், வனவிலங்குக் கண்காணிப்புப் பாடம் பயிலும் மாணவர்கள் பறவைகளைப் பார்வையிடல் பொருட்டு 08.10.2019 அன்று சோழிங்கநல்லூர் சதுப்பு நிலத்தைப் பார்வையிடல் பயணத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

★ வனவிலங்கு வார விழா–2019ஐ முன்னிட்டு, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர்களுக்கு வனவிலங்கு மருத்துவம் குறித்த வினாடி வினாப் போட்டி மற்றும் வனவிலங்குப் புகைப்படப் போட்டிகள் நடத்தப்பட்டன. தஞ்சாவூர், அருகிவரும் வனஉயிர் மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் நிறுவனர் திரு. சதீஷ்குமார் அவர்கள் 'பாம்புகள் – ஒரு கண்ணோட்டம் மற்றும் தற்போதைய பாதுகாப்பு வழிமுறைகள்' எனும் தலைப்பில் விரிவுரை ஆற்றினார். மேலும், 23.10.2019 அன்று கொண்டாடப்பட்ட




கல்லூரியின் வன உயிரினம் மற்றும் நீர்வாழ் விலங்கு மருத்துவச் சங்கத்தின் நான்காவது ஆண்டு விழாவில் தலைமை வகித்த கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள், போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். தஞ்சாவூர், மாவட்டத் தேசியப் பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. ராம்மனோகர் அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

## துணைவேந்தர் பங்கேற்பு



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 21.10.2019அன்று திருப்பதி, கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இந்தியக் கால்நடை இதய இயக்க நோய் இயல் சங்கத்தின் முதல் ஆண்டு மாநாடு மற்றும் "பண்ணை மற்றும் உடன் விலங்குகளில் நோய் கண்டறிதலில் புதுமை அணுகுமுறைகள் மற்றும் இதய நோயின் நோய்த்தீர்ப்பியல் மேலாண்மை" எனும் பயிலரங்கில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

## புதிய பல்கலைக்கழக அதிகாரிகள்



**முனைவர் நி.கு. சுதீப்குமார்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநராக 31.10.2019அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். பல்கலைக்கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் 26 ஆண்டுகள் பணியாற்றியுள்ள இவர், தொடுதிரைத் தகவல் மையம், தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான பால்பண்ணை ஆலோசனை முறை, பல்வேறு கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த கலந்துரையாடல் டிவிடிக்கள் ஆகியவற்றை உருவாக்கியதோடு இளநிலைப் பட்ட மாணவர்களுக்காகப் புதிய மென்திறன் வளர்த்தல் பயிற்சியை அறிமுகப்படுத்தினார். பன்னாட்டு அளவில் மற்றும் தேசிய அளவில் முறையே 33 மற்றும் 35 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், பன்னாட்டு அளவில் இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார். இவர், 4 முனைவர் பட்ட மாணவர்களுக்கும், 5 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கும் ஆய்வு நெறியாளராகச் செயல்பட்டுள்ளார். முதன்மை ஆராய்ச்சியாளராக 9 புறநிலை நிதியுதவித் திட்டங்களையும், ஒருங்கிணைப்பாளராக 20 புறநிலை நிதியுதவி விரிவாக்கத் திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார். பல்கலைக்கழகத்தின் நல்லாசிரியர் விருதை 2009இல் பெற்ற இவர், விவசாயிகளுக்குப் பயனுள்ள மூன்று செல்பேசி செயலிகளை உருவாக்கியதோடு 12 விவசாயிகள் தேசிய விருதுகள் பெறுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கித் தந்தார்.

**முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநராக 31.10.2019அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 30 ஆண்டுகள் பணியாற்றியுள்ள இவர், ஈமு மற்றும் நெருப்புக் கோழி உள்பட அனைத்துக் கோழியினங்களின் செயற்கை முறைக் கருவூட்டலில் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கினார். புறக்கடை மற்றும் வெப்ப எதிர்ப்புச் சக்தியுள்ள நந்தனம் கோழி 4, நந்தனம் கறிக்கோழி 3 மற்றும் தானுவாஸ் அசில் கோழிகளுக்குப் பொருத்தமான உயர்வகை மூலக்கருக்களை வெளியிட்டார். 140 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டும், 19 புத்தகங்களை எழுதியும் இருக்கிறார். இவர் 16 புறநிலை நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். 25 கோடைக்காலப் பள்ளி / கலந்தாய்வரங்கு / பயிலரங்கு / கருத்தரங்குகளை ஒருங்கிணைத்து நடத்தியுள்ள இவர், அமைப்புச் செயலாளராகச் செயல்பட்டு இரண்டு தேசியக் கருத்தரங்குகளையும் ஒரு மாநில அளவிலான பயிலரங்கினையும் ஒருங்கிணைத்துள்ளார். சிறந்த முனைவர் பட்ட ஆய்வேட்டிற்கான வெங்கேஸ் தங்கப் பதக்கமும், கலைச்சொல் அகராதிப் பணிக்காகத் தமிழ்ப் பேரவை விருதும், ரெவரெண்ட் டாக்டர் ஜோசப் இன்சாக்கல் அறக்கட்டளை விருதும், 2015ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அறிவியலாளர் விருதும் இவருக்கு அளிக்கப்பட்டுள்ளன.





**முனைவர் அ. பழனிசாமி** அவர்கள் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வராக 31.10.2019அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 29 ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பணிப் பொறுப்புகளை வகித்த இவர், உயிர் அறிவியல் பட்டதாரிகளுக்காகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின், கால்நடை உயிர்த் தொழில் நுட்பவியல் பிரிவில் எம்.எஸ்சி. மற்றும் முனைவர் பட்டப் (உயிர்த் தொழில்நுட்பம்) படிப்புகள் துவக்கிய சிறப்பிற்குரியவர். மாதவரம் வளாகத்தில் இளங்கரு உயிர்த் தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் "இளஞ்சினைக் கருசார் மூல உயிரணு", "மரபியல் மாற்றப் பணி", "அணுத்திரள்சார் உயிரியல் பணி" ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கியவர். ஆறு புறநிலை நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்திய இவர், 41 தேசிய அளவிலான பயிற்சிகளை நடத்தியுள்ளார். இவர், 63 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 8 கையேடுகளையும் வெளியிட்டுள்ளார். ஒரு முனைவர் பட்டம் மற்றும் இரண்டு ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்களுக்கும், 12 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கும் ஆய்வு நெறியாளராகச் செயல்பட்டுள்ளார். கால்நடை உயிர்த் தொழில்நுட்பத்தில் 2006ஆம் ஆண்டிற்கான டாக்டர் உன்னிகிருஷ்ணன் மேனன் நினைவு தான்சா தானுவாஸ் நல்லாசிரியர் விருது, சிறந்த ஆய்வுப் பணிக்காக 2011ஆம் ஆண்டின் இந்தியக் கால்நடை நோயெதிர்ப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்க விருது உள்பட 6 விருதுகள் பெற்றுள்ளார்.

**முனைவர் வே. அப்பாராவ்** அவர்கள் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வராக 31.10.2019அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 1994இல் பல்கலைக்கழகப்

பணியில் சேர்ந்த இவர், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் (இறைச்சி அறிவியல்) தொழில்நுட்பத் துறையில் உணவுப் பரிசோதனை ஆய்வகத்தை நிறுவினார். 73 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 17 புத்தகங்களையும், 23 பயிற்சிக் கையேடுகளையும் வெளியிட்டுள்ளார். இரண்டு முனைவர் பட்ட மாணவர்களுக்கும், 16 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கும், ஒரு முதுநிலைப் பட்டய மாணவர்க்கும் ஆய்வு வழிகாட்டியாகச் செயல்பட்டுள்ளார். 2001ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத்தின் சிறந்த முனைவர் பட்ட மாணவர்க்கான மூன்று தங்கப் பதக்கங்கள், பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டப் படிப்பிற்கான மின் பாடங்கள் உருவாக்கத்தில் சிறந்த பங்களிப்பு செய்ததற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பாராட்டுக் குழு விருது, 2009 மற்றும் 2016இல் தமிழில் சிறந்த



புத்தகம் வெளியிட்டதற்காகத் தமிழ்ப் பேரவை விருது உள்படக் கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் 17 பதக்கங்களையும் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

### மாணவர் நிகழ்ச்சிகள்

- ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிமூலம் “ஆட்சிப் பணியில் வேலைவாய்ப்புகள்”



குறித்த வழிகாட்டுதல் நிகழ்ச்சி 18.10.2019அன்று நடத்தப்பட்டது. கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாடமி குழுவினர் ஆட்சிப் பணியில் உள்ள பல்வேறு வேலைவாய்ப்புகள் குறித்து விரிவுரை வழங்கினர். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கு. மணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மொத்தம் 96 மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

- பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்டம் மற்றும் கல்விநிலைய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதலாமாண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்ட மாணவர்களுக்கு அறிமுகமில்லாதவர்களைச் சந்திக்கச் செய்யும் நிகழ்ச்சி 18.10.2019அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் துவக்கிவைத்தார். உளவியலாளர் மற்றும் ஆலோசகர் முனைவர் கே. ஜெயந்தி அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 31.10.2019அன்று சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டுப் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வழிகாட்டுதலின்படி “தேசிய ஒருமைப்பாட்டு நாள்” கடைப்பிடிக்கப்பட்டது. கல்லூரியின் இளநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் கல்லூரி ஆசிரியர்களால் நாட்டின் ஒற்றுமை, நேர்மை மற்றும் பாதுகாப்பை முழு ஈடுபாட்டுடன் வளர்ப்பதற்கு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் “தூய்மையே சேவை 2019 – மாபெரும் நெகிழிக் கழிவு நீக்கம்” எனும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 02.10.2019அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியைக் கல்லூரி



முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் 150 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

- ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் முதன்முறையாகக் கல்வியாண்டு 2019–2020இல் இருந்து முதுநிலைப் பட்ட வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளன.

### மாணவர்கள் சாதனை



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மூன்றாம் ஆண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்ட மாணவர் எஸ். அபிசேக், புதுதில்லியில் 02.10.2019 முதல் 06.10.2019 வரை நடைபெற்ற 44ஆவது தேசிய டென்னிகாய்ட் வாகையர் பட்டப் போட்டியில் பங்கேற்று இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும், குழு வாகையர்

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/05254
Date of publication : 25th and 26th of every month

பெறுநர்

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

போட்டியில் வெள்ளி பதக்கமும் வென்றார். கல்லூரியின் நான்காம் ஆண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்ட மாணவர் பி. சந்தோஷ்குமார், 18.10.2019 முதல் 25.10.2019 வரை டையூவில் நடைபெற்ற தேசிய அளவிலான நீச்சல் போட்டியில் பங்கேற்று, மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார்.

## நாட்டுநலப் பணித் திட்டம்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் நாமக்கல், லத்துவாடி அரசு ஆரம்பப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு "பாதுகாப்பான தீபாவளி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி" கடைப்பிடிக்கப்பட்டது. இதில் 150 நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் "நெகிழி மாசு இல்லாமை" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, 12.10.2019 முதல் 18.10.2019 வரை நடத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக வரைபட வண்ணம் தீட்டுதல் போட்டி 12.10.2019அன்றும், நெகிழி மாசு இல்லாமை குறித்த விழிப்புணர்வுப் பேரணி, தஞ்சாவூரில் 15.10.2019அன்றும் நடத்தப்பட்டன. மேலும், "தூய்மையே சேவை" குறித்த தேசிய உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி 16.10.2019அன்று நடத்தப்பட்டது.

## பணி ஓய்வு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உணவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.ஆர். புருஷோத்தமன் அவர்கள் 31.10.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 02.10.1959இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உடலியங்கியல் துறையின் உடனாள் திரு. பி. இரவிக்குமார் அவர்கள் 31.10.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 10.10.1961இல் பிறந்த இவர், 25 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (பால்வள அறிவியல்) துறையின் உடனாள் திருமதி மணிமேகலை அவர்கள் 31.10.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 10.10.1961இல் பிறந்த இவர், 22 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தின் அடிப்படை ஊழியர் திரு. பி. இராஜன் அவர்கள் 31.10.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 05.10.1959இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலசந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா